# பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் உள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலை!

## அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன் - சா.சி சிவசங்கர் ஆய்வு!

பெரம்பலூர், அக். 17 - பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், எறையூர் கிராமத்தில் உள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலையில், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி சிவசங்கர் இருவரும் சர்க்கரை ஆலைகள் இயக்குநர் த.அன்பழகன், மாவட்ட ஆட்சித் தலைவர் கிரேஸ் பச்சாவ் ஆகியோர் தலைமையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின்போது பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சர்க்கரை ஆலையில் உள்ள இயந்திரங்கள் குறித்தும், அவற்றின் தற்போதைய நிலை குறித்தும் அமைச்சர்கள் ஆலையின் ஒவ்வொரு பகுதியாக பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். அதனைத் தொடர்ந்து, சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர்கள், சர்க்கரை ஆலை அலுவலர்களுடன் ஆலை நிர்வாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிலுவைத் தொகை, வழங்கப்பட வேண்டிய தொகை உள்ளிட்டு விரிவாக ஆலோசனை மேற்கொண்டு அனைவரிடத்திலும் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வின்போது, டிராக்டர் சங்கத்தினர், சர்க்கரை ஆலைக்குள் டிராக்டரில் கரும்பு லோடு ஏற்றி வருவதற்கு ஏதுவாக சாலையினை மேம்பாடு செய்து தரவேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இதைக்கேட்ட சுற்றுலாத் துறை அமைச்சர் அடுத்த அரவைப்பருவத்திற்குள் சாலையினை மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்க ஆலை தலைமை நிர்வாகிக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வின் போது சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. 2023-24 அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 16 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் இயங்கியது.

2019-2020 நடவுப்பருவத்தில் 0.95 லட்சம் எக்டராக இருந்த கரும்பு பதிவு பரப்பு 2022-2023 நடவுப்பருவத்தில் 1.37 லட்சம் எக்டராக அதிகரித்தது. பின்னர் 2023-2024 நடவுப் பருவத்தில் 0.99 லட்சம் எக்டராக குறைந்தது. அதே போல கரும்பு அரவை, 2022-2023 ஆம் ஆண்டில் 160.54 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. நடப்பாண்டில் 95 லட்சம் மெட்ரிக் டன் அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கரும்பு சாகுபடி போதிய மழை இல்லாமை, பண்ணை வேலையாட்கள் பற்றாக்குறை, பொக்கா போயிங் நோய் தாக்குதல் மற்றும் அதிக கரும்பு அறுவடைக் கூலி ஆகிய காரணங்களால் குறைந்தது. கரும்பு விலை 2015-16 அரவை பருவத்தில் இருந்து 2019-20 அரவை பருவம் வரை உயர்த்தப்படாமல் டன் ஒன்றுக்கு ரூ.2750/ என்றிருந்தது. இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு 2020-21 அரவை பருவத்திற்கு நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.192.50/ அறிவிக்கப்பட்டது. 2021-22 மற்றும் 2022-23 அரவை பருவங்களில் சிறப்பு ஊக்கத் தொகை ரூ.195.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது இதன் விளைவாக 2022-23 அரவை பருவத்தில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.3016 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2023-24 அரவை பருவத்தில், நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் தமிழ்நாடு அரசால் டன் ஒன்றுக்கு ரூ.215/ சிறப்பு ஊக்கத்தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.3135/ ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசால் ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்குவதற்கும். சர்க்கரை ஆலை பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும். ஆலையின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காகவும் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.694.37 கோடி வழிவகைக் கடனாக தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலை விவசாயிகள் பயன் பெறும் வகையில் சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.775.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

கரும்பு சாகுபடிப் பரப்பு மற்றும் சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் (NADP) உயர் மகசூல், அதிக சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களின் வல்லுநர் விதைக் கரும்பு, திசு வளர்ப்பு நாற்றுக்கள், பருசீவல் நாற்றுக்கள். ஒருபருவிதைக்கரும்பு போன்ற இனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. கடந்த இரண்டாண்டு களில் 10,480 விவசாயிகளுக்கு ரூ. 8.40 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் 2024.25 ஆம் ஆண்டிலும் ரூ.7.91 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

2021-2024 நிதியாண்டுகளில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்குடன் அதிக மகசூல், அதிக சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களின் பருசீவல் நாற்றுக்கள், ஒருபரு விதைக் கரும்பு ஆகியவை 2,379 விவசாயிகளுக்கு இதுவரை 1.68 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு சாகுபடியில் சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு மாநில நிதியிலிருந்து ஒரு எக்டருக்கு ரூ.32,715 லிருந்து ரூ.43,534 வரை சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறைந்த நீரைப் பயன்படுத்தி கரும்பு சாகுபடி மேற்கொள்ளும் வகையில் 2023-2024 ஆம் ஆண்டு 1,432 எக்டர் பரப்பளவில் புதிதாக நுண்ணீர்ப் பாசனம் அமைக்கப்பட்டு 1,335 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

13 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தானியங்கி எடைமேடை அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கரும்பு விவசாயிகள் வழங்கும் கரும்பிற்கு துல்லியமான முறையில் எடையிடப்பட்டு உடனுக்குடன் எடை விவரங்கள் குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. 13 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நவீன ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி பெரம்பலூர் சர்க்கரை ஆலை ஆய்வு செய்யப்பட்டு, விவசாயிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளிடம் கலந்துரையாடி கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளது. அனைத்து கோரிக்கைகளின் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இதில் சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் பா முருகன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, பெரம்பலூர் சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி வருவாய் அலுவலர் க.ரமேஷ் வேப்பந்தட்டை அட்மா தலைவர் வீ.ஜெகதீசன் வேப்பந்தட்டை ஒன்றிய குழு பெருந்தலைவர் க.ராமலிங்கம் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், மகாதேவி ஜெயபால், ஆலை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் விவசாய சங்க பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

# வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் என்.கௌதமன் - உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, அக். 17 - நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்டப் பொறுப்பு அமைச்சர், பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ், நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழகத் தலைவர் உ.மதிவாணன், நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. முகம்மது ஷா நவாஸ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர் ஆகியோர் முன்னிலை கூட்டம் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பு அமைச்சர், பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசுகையில்,

நாகப்பட்டினம் மாவட்டத்தில், பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு 12 வட்ட அளவி குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. 68 பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு, 340 தற்காலிக நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளன. தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினர் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளுக்கு 25 நபர்கள் அடங்கிய குழு முன்கூட்டியே வரப்பெற்று நடவடிக்கை மேற்கொள்ள தயார் நிலையில் உள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கக்கூடிய பகுதிகளில் மீட்பு படகுகள் இன்றே நிலை நிறுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுடைய பொறுப்பு வட்டங்களுக்கு சென்று ஆயத்த பணிகளையும், மீட்பு மற்றும் நிவாரண பணிகளையும் மாவட்ட நிருவா கத்துடன் இணைந்து மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உணவுத்துறை மூலம் அத்தியாவசிய பொருட்களின் விலை உயராமல் அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தங்குதடையின்றி ஆவின் நிறுவனம் மூலம் பால் மற்றும் பால் பொருட்கள் விநியோகத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிவாரண முகாம்களை தயார் நிலையில் வைப்பதோடு, பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் இருந்து முன்கூட்டியே பொதுமக்களை நிவாரண முகாம்களில் தங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ரொட்டி, குடிநீர் பாட்டில்கள் நிவாரண மையங்களில் இன்றே இருப்பு வைக்க வேண்டும்.

மேலும், மருத்துவ வசதிகள் செய்து தரப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து வட்டங்களிலும் சாலைப்பணிகள் நடைபெறும் இடங்களில் இரவு நேரத்தில் போதுமான ஒளிரும் பட்டைகள் மற்றும் பாதுகாப்பு தடுப்புகள் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மின் உற்பத்தி தடைப்படாமல் இருக்கவும், மின் விநியோகம் சீராக இருக்கவும், கட்டுப்பாட்டு மையத்தில் கூடுதலான பணியாளர்கள் இருப்பதையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் வசிக்கும் முதியோர், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க ஏதுவாக அவர்களது முகவரி அடங்கிய விவரப்பட்டியல் பெறப்பட்டது. மேலும், உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள், மீனவர்கள், நான்கு சக்கர மற்றும் இரு சக்கர வாகன உரிமையாளர்கள், விடுதிகளில் தங்கி இருப்பவர்கள், பயணங்களை திட்டமிட்டுள்ளவர்கள், அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள், வணிக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், நடைபாதை வியாபாரிகள், கட்டுமானப் பணியை மேற்கொள்பவர்கள் கனமழைக்கான திட்டமிடுதலையும் முன்னேற்பாடுகளையும் செய்து கொள்ள வேண்டும்.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மாவட்ட நிருவாகத்தின் அறிவுரையின்படி முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு செல்ல வேண்டும். முக்கிய பொருட்கள் மற்றும் ஆவணங்களை நீர் புகா வண்ணம் பாதுகாப்பாக வைக்க வேண்டும். கனமழை எச்சரிக்கையை முன்னிட்டு பொதுமக்கள் கடற்கரை, சுற்றுலா தலங்கள், வழிபாட்டு தலங்கள், நீர்நிலைகள் ஆகிய பகுதிகளில் கூட வேண்டாம். அறுந்து கிடக்கும் மின் கம்பிகளிலிருந்து விலகி இருக்க வேண்டும். கர்ப்பிணி பெண்கள், நோயாளிகள், முதியோர்கள் ஆகியோருக்கு தேவையான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும். பொதுமக்கள் சமூக வலை தளங்களில் பரவும் வதந்திகளை நம்ப வேண்டாம். அரசு அலுவலர்கள் அளிக்கும் முறையான முன்னெச்சரிக்கையின்படி நடந்து கொள்ள வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயற்கை இடர்ப்பாடுகள் குறித்து பொது மக்கள் அனைவரும் முன் கூட்டியே துல்லிய மாக அதிகாரபூர்வமான தகவல்களை அறிந்து கொள்ளவும், அவற்றிலிருந்து தற்காத்து கொள்ளவும் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை குறித்து அவரவர் ஆண்ட்ராய்டு அலை பேசிமூலம் அறிந்து கொள்ளலாம்.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த செயலி மூலம் தங்கள் பகுதியில் நிலவும் வானிலை அறிக்கை, மழையளவு விவரம், செயற்கைகோள் புகைப்படங்கள், பேரிடர் காலங்களில் பாதிக்க கூடிய பகுதிகளின் வரைபடங்கள், பேரிடர் காலங்களில் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை போன்ற அறிவுரைகளும் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், வடகிழக்கு பருவமழை காலத்தில் மழை, புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை இடர்ப்பாடுகளை எதிர் கொள்ள கட்டணமில்லா மாவட்டமான நாகப்பட்டினம் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாகப்பட்டினம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு மையத்தில் 043651077 என்ற தொலைபேசி எண் மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண். 18002334233 இயங்கி வருகிறது. இக்கட்டுப்பாட்டு மையத்தில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். எனவே பொது மக்கள் இயற்கை பேரிடர் தொடர்பான கோரிக்கைகள் இருப்பின் உடனடியாக மேற்படி தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கும் பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட நிருவாகம் தயார் நிலையில் உள்ளது என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்; மாநில பேரிடர் மீட்பு படைகள் மற்றும் தீயணைப்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த பேரிடர் மீட்பு உபகரணங்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யாமொழி பார்வையிட்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.கே. அருண் கபிலன், மாவட்ட வருவாய் அலுவலர் .ரா. பேபி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன் சங்கர் ராஜ்,நாகை நகர் மன்ற தலைவர் இரா. மாரிமுத்து, துணைத் தலைவர் செந்தில் குமார், வட்டார ஆத்மா குழு தலைவர்கள் ஆ. தாமஸ் ஆல்வா எடிசன், செல்வ செங்குட்டுவன் பா கோவிந்தராஜன் சிக்கல் என் ஆனந்த், மகா குமார், நாகை மாவட்டக் கழக துணை செயலாளர் ஆரூர் மணிவண்ணன் மற்றும் வருவாய்த்துறை, காவல் துறை, மாவட்ட ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை, சுகாதாரத்துறை, வனத்துறை, தீயணைப்புத்துறை, மற்றும் அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

---

### தர்மபுரி கிழக்கு மாவட்டம்

# பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் அறிமுக கூட்டம்!

தர்மபுரி, அக். 17 - முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி தருமபுரி கிழக்கு மாவட்டம், பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி அவர்களின் அறிமுக கூட்டம் அறிமுக கூட்டம் பென்னாகரம் சமுதாய கூடத்தில் தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்டக் கழகப் பொருளாளர் தங்கமணி, துணைச் செயலாளர்கள் ரேணுகா தேவி, உமாசங்கர், பொதுக்குழு உறுப்பினர் சோலை மணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏரியூர் செல்வராஜ், மடம் முருகேசன், ஏ.கருணாநிதி, சுபாநாதன்,

பேரூர்க் கழகச் செயலாளர்கள் வீரமணி, சண்முகம் மற்றும் பென்னாகரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர், BLA-2, BLC நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை ப. நாராயணசாமி

**அக்டோபர் 17 (1993)**



'தஞ்சை மாவட்ட பெரியார்' என்று போற்றப்பட்டவர்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்படப் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது "பெரியார் விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். இராகவானந்தம்

**அக்டோபர் 17 (1999)**



திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.

தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**